| | |
|---|---|
| மையம் : ______________ | பெயர்: ______________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ______________ | பதிவு எண்: ______________ |
| | நாள் : ______________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – ஜனவரி–பிப்ரவரி 2022**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**

Time : 1.30 hrs. Total Marks : 50

**பகுதி – 1**

I. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following text and answer the questions given below in a single line. **(5x1=5)**

திருக்குறள் தமிழர்களின் மறை என்றும் உலகப் பொதுமறை என்றும் போற்றப்படுகிறது. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திரு + குறள்= திருக்குறள். திரு என்னும் சொல் பெருமை, சிறப்பு, மேன்மை என்னும் பல பொருள்களை உணர்த்தும். குறள் என்பது இரண்டி வெண்பாவைக் குறிக்கும். இதில் 133 அதிகாரங்கள், 1330 குறள்கள் உள்ளன.

**வினாக்கள் :**

1. திருக்குறளை இயற்றியவர் யார்?

______________________________

2. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

______________________________

3. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

______________________________

4. குறள் என்பது எதனைக் குறிக்கிறது?

______________________________

5. திருக்குறளில் எத்தனை குறள்கள் உள்ளன?

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

காயக் கண்டது சூரியகாந்தி
கலங்கக் கண்டது
வெண்தயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறுகக் கண்டது
வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்
தணிப்பக் கண்டது
தாபதர் உள்ளம்
தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்
சீவல மங்கைத்
தென்கரை நாடே!

**வினாக்கள்**

1. காய்வது எது?

2. கலங்குவது எது?

3. சாய்வது எது?

4. தேய்வது எது?

5. இப்பாடலில் குறிப்பிடப்படும் நாடு எது ?

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**

Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. வீரவிளையாட்டு

______________________________

______________________________

2. மகிழ்ச்சி

______________________________

______________________________

3. பசுமை

______________________________

______________________________

4. கருணை

______________________________

______________________________

5. முயற்சி

______________________________

______________________________

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. தாயின் கடமை என்ன? அவள் பெற்ற குழந்தையின் கடமை என்ன?
2. கணிப்பொறி என்றால் என்ன? அதன் அடிப்படை பகுதிகளை எழுதுக..
3. சுப்ரமணிய பாரதியார் – சிறு குறிப்பு வரைக.
4. காளமேகப் புலவர் நூல் அறிமுகம் குறித்து எழுதுக.
5. சுட்டெழுத்துக்கள் என்றால் என்ன? உதாரணம் தருக.
6. இடப்பெயர் என்பது யாது? உதாரணம் தருக
7. வேற்றுமை உருபு என்றால் என்ன?
8. நேர்காணல் என்றால் என்ன?
9. வினைமுற்று விளக்கி எடுத்துக்காட்டு தருக.

10. அதிசூரன் ஏனாதிநாதர் மீது பொறாமை கொண்டது ஏன்?

**V. பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**

Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. நீ விரும்பி படித்த நூலினைக் குறித்து உன் மாமாவிற்கு ஒரு கடிதம் வரைக.
2. நீ சென்று வந்த வரலாற்று சிறப்புமிக்க இடத்தினைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
3. நீ கண்டு மகிழ்ந்த விளையாட்டுப் போட்டியினைப் பற்றி உன் அப்பாவிற்கு ஒரு கடிதம் எழுதுக.